REGISTERED No. M. 7463

KERALA GAZETTE

EXTRAORDINARY

PUBLISHED BY AUTHORITY

Vol. VIII] Trivandrum, Thursday, 12th December 1963 / 21st Agrahayana 1885 [No. 135

GOVERNMENT OF KERALA

Law Department

NOTIFICATION

No. 9470-F1/63/Law. *Dated, Trivandrum, 12th December* 1963/ *Agrahayana* 21, 1885.

The following Act of the Kerala State Legislature is hereby published for general information. The Bill as passed by the Legislative Assembly, received the assent of the President on the 4th day of December, 1963.

By order of the Governor,
P. SANKARAN ELAYATH,
Law Secretary.

PRINTED AND PUBLISHED BY THE S.G.P. AT THE GOVERNMENT PRESS, TRIVANDRUM, 1963.

ACT 42 OF 1963

THE MUSLIM PERSONAL LAW (SHARIAT) APPLICATION (KERALA AMENDMENT) ACT, 1963.

An Act to amend the Muslim Personal Law (Shariat) Application Act 1937 (Central Act 26 of 1937), in its application to the State of Kerala.

Preamble.—WHEREAS it is expedient to amend the Muslim Personal Law (Shariat) Application Act, 1937 (Central Act 26 of 1937), in its application to the State of Kerala in the manner hereinafter appearing;

BE it enacted in the Fourteenth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Muslim Personal Law (Shariat) Application (Kerala Amendment) Act, 1963.

(2) It shall come into force at once.

2. *Central Act 26 of 1937 in it's application to the State of Kerala to be amended.*—The Muslim Personal Law (Shariat) Application Act, 1937 (hereinafter referred to as the 'said Act') shall, in its application to the State of Kerala, be amended in the manner hereinafter provided.

3. *Substitution of a new section for section 2, Central Act 26 of 1937.*—For section 2 of the said Act, the following section shall be substituted, namely:—

"2. *Application of personal law to Muslims.*— Notwithstanding any custom or usage to the contrary, in all questions regarding intestate succession, special property of females including personal property inherited or obtained under contract or gift or any other provision of personal law, marriage, dissolution of marriage, including *talaq, ila, zihar, lian, khula* and *mubaraat*, maintenance, dower, guardianship, gifts, trusts and trust properties and *wakfs*, (other than charities and charitable institutions and charitable and religious endowments) the rule of decision in cases where the parties are Muslims, shall be the Muslim Personal Law (Shariat)".

4. *Repeal.*—The Muslim Personal Law (Shariat) Application (Madras Amendment) Act, 1949 (Madras Act XVIII of 1949), as in force in the Malabar district referred to in sub-section (2) of section 5 of the States Reorganisation Act, 1956 (Central Act 37 of 1956), is hereby repealed.

Kerala Gazette No. 49 dated 10th December 1963.
PART II

1963, ச. ச, சட்டமூலம் எண். 27

விளம்பரம்.

எண். 3835/ச. ச. 7/63.

கேரளச் சட்டசபையின் நடைமுறை மற்றும் அலுவல் நடப்பு பற்றிய ஒழுங்குகளின் 67-வது ஒழுங்கின் கீழ், மன்றத்தலைவர் ஆணையிட்டவாறு, கீழ்வரும் சட்டமூலம், நோக்கங்கள் மற்றும் காரணங்களின் அறிவிக்கையுடனும் ஒப்படைக்கப்பட்ட சட்டம் இயற்றுவதற்கான அதிகாரம் பற்றிய நினைவுக்குறிப்புடனும் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டசபைசெயலகம்,
திருவனந்தபுரம்,
11-7-1963.

டி. திருமலை,
செயலாளர்,
சட்டசபை.

1963-ம ஆண்டின் கேரள பஞ்சாயத்துகள் (திருத்தம்) பற்றிய சட்டமூலம்.

1960-ம் ஆண்டின் கேரள பஞ்சாயத்துகள் சட்டத்தை மீண்டும் திருத்துவதற்கான ஒரு சட்டமூலம்.

பீடிகை.—இதன் பின் காணப்படும் நோக்கங்களுக்கென 1960-ம் ஆண்டின் கேரள பஞ்சாயத்துகள் சட்டத்தை மீண்டும் திருத்துதல் உசிதமென்பதால்;

இந்தியக்குடியரசின் பதினான்காவது ஆண்டு இது கீழ்வருமாறு இயற்றப்பெறலாகட்டும்,—

1. சுருக்கத்தலைப்பும் துவக்கமும்.—

(1) இச்சட்டம் 1963-ம் ஆண்டின் கேரள பஞ்சாயத்துகள் (திருத்தம்) பற்றிய சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) அரசாங்கம், அரசிதழில் விளம்பரம் செய்வதன்மூலம் நிர்ணயிக்கின்ற வாறான நாளன்று இது அமுலுக்கு வரவேண்டும்.

2. 3 எ, 3 பி, மற்றும் 3 ஸி, என்னும் புதிய பிரிவுகள் இடைப்புகுத்துதல்.—

இதன் பின் முதற்சட்டமென குறிப்பிடப்படும் 1960-ம் ஆண்டின் கேரள பஞ்சாயத்துகள் சட்டத்தில் (1960-ன் 32-வது சட்டம்), 3-வது பிரிவுக்குப்பின், கீழ் வருமாறான பிரிவுகள் இடைப்புகுத்தப்படவேண்டும்.—

"3 எ, நகர்ப்புறம்.—

(1) சட்டசபையினால் இதற்கெனத்தெளிவான பிரேரணை ஒன்று பிறப்பிக்கப்பட்டிருந்தால், அரசாங்கம், அரசிதழில் விளம்பரம் செய்வதன்மூலம் பஞ்சாயத்தின் ஏதேனும் பகுதி அல்லது அதன் பாகம், விளம்பரத்தில் குறிப்பிடும் நாள் முதல் ஒரு நகர்ப்புறமாகும் என அறிவிக்கவேண்டும்.

(2) அரசாங்கம் அரசிதழில் விளம்பரம் செய்வதன் மூலம், 1-ம் துணைப்பிரிவின் கீழ் நகர்புறமென அறிவிக்கப்பட்ட பகுதிக்கென நகர்புறக்குழு ஒன்று அமைக்கவேண்டும்.

(3) 2-ம் துணைப்பிரிவின் கீழ் அரசாங்கத்தினுல் பிறப்பிக்கப்பட்ட விளம்பரம் ஒன்றில்.—

(i) நகர்புறக்குழுவின் அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கை;

(ii) நகர்ப்புறக்குழுவின் உறுப்பினர்களாக இருக்கவேண்டிய நபர்கள் அல்லது அவர்கள் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய முறை;

(iii) நகர்ப்புறக்குழுவின் தலைவராக தெரிந்தெடுக்கப்படவேண்டிய நபர் அல்லது அவர் தெரிந்தெடுக்கப்படவேண்டிய அல்லது நியமிக்கப்படவேண்டிய முறை;

(iv) உறுப்பினர்களின் மற்றும் தலைவரின் பதவிக்காலம்;

(v) அலுவல் நடத்தும்போது நகர்ப்புறக்குழுவினுல் கையாளப்பட வேண்டிய நடைமுறை;

ஆகியவை வகை செய்யப்பட்டிருக்கவேண்டும்.

(4) அரசாங்கம் (நகர்புறக்குழுவின் உறுப்பினரல்லாத) ஏதேனும் நபரை அதன் நிருவாக அதிகாரியாக நியமிக்கவேண்டும்.

(5) இப்பிரிவும் 3 பி. 3 வி. பிரிவுகளும் தவிர இச்சட்டத்தின் விதிகள், 1-ம் துணைப்பிரிவின் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்ட நாள் முதல் நகர்ப்புறத்துக்குப் பொருந்தாதொழிய வேண்டும்.

3. பி. 1961-ம் ஆண்டின் 14-வது கேரளச் சட்டமுலம் வேறு சட்டங்களும், குறிப்பிடப்பட்ட மாற்றங்கள், கூடுதலாக சேர்த்தவை மற்றும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு, நகர்ப்புறத்துக்குப் பொருந்துதல்.

(1) அரசாங்கம், அரசிதழில் விளம்பரம் செய்வதன் மூலம், 1960-ம் ஆண்டின் கேரள நகராட்சி சட்டத்தின் (1961-ன் 14-வது சட்டம்), அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குகளின், அல்லது கேரள மாநிலத்தின் எனில் நகர்புறத்தில் அல்லாத எந்தப் பகுதியிலேனும் அப்போது அமுலிலிருக்கும் வேறு ஏதேனும் சட்டத்தின் விதிகளில் எவையேனும், விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய அளவிலும் அவ்வாறுன மாற்றங்கள், கூடுதலாகச் சேர்த்தவை மேலும் கட்டுப் பாடுகளுக்கும் உட்ப்பட்டும் அப்பகுதிக்குப் பொருந்தவேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(2) முக்கியமாக மற்றும் மேற் கூறிய விதிகளின் பொதுத் தன்மைக்குப் பாதகமாகாதவாறு, இத்தகைய விளம்பரம்.—

(அ) இப்பிரிவின் கீழ், நகர்ப்புறத்துக்குப் பொருந்தக்கூடிய விதிகளின் மூலம் விதிக்கக்கூடிய எல்லா வரிகளும் கட்டணங்களும் அல்லது அவற்றில் எவையேனும் விதிப்பதற்கு நகர்ப்புறக்குழுவிற்கு அதிகாரமளிக்கலாம்; மேலும்

(ஆ) நகர்புறம் சம்பந்தமாக, விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய ஒழுங்குகள், வரையறைகள், நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஏதுமிருந்தால் அதற்குக்குட்ப்பட்டு, மேற்கூறியவாறு பொருந்தும் விதிகளின் கீழ், முறையே நகராட்சி மன்றம், நகராட்சி மன்றத் தலைவர் மற்றும் நகராட்சி ஆணையாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பிரயோகிக்கவும் கடமைகள் நிறைவேற்றவும், நகர்ப்புறக்குழுவிற்கும், நகர்ப்புறக்குழுவின் தலைவருக்கும், நகர்புறக்குழுவின் நிருவாக அதிகாரிக்கும் அதிகாரம் அளிக்கலாம்.

(3) 3 பி. பிரிவின் 1-ம் துணைப்பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட எல்லா விளம்பரங்களும், அவை பிறப்பிக்கப்பட்ட உடன்தானே, கூட்டத்தொடரின்போது, ஒரு கூட்டத்தொடரில் அல்லது, தொடர்ந்துள்ள இரு கூட்டத்தொடரிலாக மொத்தம் பதினான்கு நாட்களுக்குச் சட்டசபைமுன் வைக்கப்படவேண்டும். மேலும், அந்தந்தக் காரியங்களிலானது போல், இவ்வாறான கூட்டத்தொடர் அல்லது உடனடியாகத் தொடரும் கூட்டத்தொடர் முடிவடையுமுன், சட்டசபை, விளம்பரத்தில் ஏதும் மாற்றம் வருத்துகின்றதெனில் விளம்பரம் மாற்றம் வருத்தப்பட்ட முறையிலேயே பயனுடைத்தாகவேண்டும், அல்லது விளம்பரம் பிறப்பிக்கப்படக் கூடாதெனத் தீர்மானிக்கின்றதெனில் பயனற்றதாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் இத்தகைய மாற்றம் அல்லது தள்ளுபடி, அவ்விளம்பரத்தின் கீழ் முன்னர் செயலாக்கப்பட்டவற்றின் செல்லுபடியாகும் தன்மைக்குப் பாதகமற்றதாக இருக்கவேண்டும்.

3. ஸி. நகர்ப்புறமென அறிவிக்கப்பட்ட பஞ்சாயத்துகளின் சொத்துக்கள், உரிமைகள், பொறுப்புகள் ஆகியவை கைமாற்றம் செய்தல்.

(1) பஞ்சாயத்துகளுக்கெதிராக சட்டப்படியாக உள்ள எல்லா பொறுப்புகளும் அதுபோன்று, எத்தகையதாயினும் இவ்வாறான ஏதேனும் பஞ்சாயத்தினால் அல்லது பஞ்சாயத்திற்காக, பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது கைவசம் வைத்திருக்கப்பட்ட எல்லாச் சொத்துக்களும், உரிமைகளும் மற்றும் எத்தகையதாயினும் உடமையாயிருந்த, அல்லது ஒப்படைக்கப்பட்டிருந்த அல்லது பொறுப்பில் வைக்கப்பட்டிருந்த எல்லா பாத்தியதைகளும், இவ்வாறு சொத்துக்கள் உரிமைகள், பாத்தியதைகள் அல்லது பொறுப்புகள், 3 எ பிரிவின் 1-ம் துணைப்பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட நகர்புறம் சம்பந்தப்பட்டதாக இருக்கும் வரையில் அவை, அந்தத் துணைப்பிரிவின் கீழ், அறிவிப்பு விடுக்கப்பட்ட நாள்முதல் மேற்கூறிய நகர்ப்புறத்தின் நகர்ப்புறக்குழுவிற்குக் கைமாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(2) 1-ம் துணைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் சொத்து, உரிமை, பாத்தியம் அல்லது பொறுப்பு நகர்ப்புறம் சம்பந்தமானவைதானா, அல்லது மேற்கூறிய துணைப்பிரிவின் கீழானவை தானா என்பது பற்றி ஏதேனும் தகராறு எழும்போது, அவ்விஷயம், அரசாங்கத்திற்குக் குறிப்பிடு செய்யப்பட வேண்டுமென்பதோடு, அதன்மீதான அரசாங்கத்தின் முடிவு இறுதிமுடிவாக இருக்கவும் வேண்டும்.

(3) 3 எ பிரிவின் 1-ம் துணைப்பிரிவின் கீழ் அறிவிப்பு விடுக்கப்படும் நாளுக்கு முன்னர் உடனடியாக, வரிக்கென, அல்லது செலவுகள் அல்லது நஷ்டஈடுகளுக்கென எழுகின்ற, அல்லது வேறு விதத்தில் ஏதேனும் பஞ்சாயத்துக்கு செலுத்தவேண்டிய கட்டுச்சேர்க்கை மூலமான எல்லா வரி நிலுவைகளும் அல்லது செலுத்தவேண்டிய வேறு தொகைகளும், இத்தகைய நிலுவைகள் அல்லது வேறு தொகைகள் நகர்ப்புறம் சம்பந்தப்பட்டதாக இருக்கும்வரை, நகர்ப்புறக் குழுவினால் ஈடாக்கப்படலாம்.

(4) 3 எ பிரிவின் 1-ம் துணைப்பிரிவின் கீழ், அறிவிப்பு விடுக்கப்பட்ட நாளுக்கு முன் உடனடியாக, ஒரு பஞ்சாயத்தினால் அல்லது பஞ்சாயத்துக்கெதிராக எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளும், அவை (1)-வதும் (3)-வதும் துணைப்பிரிவுகளில் வகை செய்யப்பட்டுள்ள விஷயங்கள் சம்பந்தப்பட்டவையாக இருக்கும் வரை, நகர்ப்புறக் குழுவினால் அல்லது குழுவுக்கெதிராகத் தொடரப்படலாம்."

3. <u>39-வது பிரிவிற்குப் பதிலாக புதிய பிரிவு மாற்றியிடப்படல்.—</u>

முதற் சட்டத்தின் 39-வது பிரிவுக்குப் பதிலாகக் கீழ்வரும் பிரிவு மாற்றியிடப்படவேண்டும்.—

"39. பொதுப் பஞ்சாயத்து நிருவாக அமைப்பு.—

(1) அரசாங்கத்தினால் இதற்கென குறிப்பிடக்கூடியவாறான ஒழுங்குமுறைக்குட்பட்டு, அரசாங்கம், மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்தின் கீழ் வேலை செய்யும் நிருவாக அதிகாரிகளல்லாத பணியாட்களை ஒன்று சேர்த்து மாநிலத்திற்கான பொதுப் பஞ்சாயத்து நிருவாகமொன்று அமைக்கலாம்.

(2) ஒரு பஞ்சாயத்தின், நிருவாக அதிகாரிகள் அல்லாத, அதிகாரிகள் மற்றும் பணியாட்களின் எண்ணிக்கையும் உத்தியோகப் பெயரும் அரசாங்கம் நிர்ணயிக்கவோ அல்லது மாற்றவோ செய்யலாம்.

(3) அரசாங்கம், பஞ்சாயத்துகளின் அதிகாரிகள் மற்றும் பணியாட்கள் (வேலைக்கென) சேர்க்கப்படுதல் மற்றும் அவர்களது பணி நிலைமைகளையும் ஒழுங்குபடுத்தும்பொருட்டு ஒழுங்குகள் உருவாக்கலாம்.

(4) அரசாங்கம், இரண்டோ அல்லது அதற்கு அதிகமோ பஞ்சாயத்துகளின் பொருட்டு, பொதுப்பணியாளர் தொகுதி நியமிக்கலாமென்பதோடு, ஒவ்வொரு பஞ்சாயத்திலிருந்தும், இத்தகைய பணியாளர் தொகுதியின் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளவாறான ஊதியம் மற்றும் படிகளின் விதம், மற்றும் பொதுவான கட்டளையின் மூலம் அல்லது பிரத்தியேகமான கட்டளையின் மூலம் அரசாங்கம் நிர்ணயிக்கக்கூடியவாறான அவர்களின் விருப்புப் படிகள், ஓய்வூதியம் மற்றும் பிராவிடெண்டு பண்டின்பாலுள்ள உதவித்தொகைகளும் ஈடாக்கவும் செய்யலாம்."

<u>நோக்கங்கள் மற்றும் காரணங்களின் அறிக்கை.</u>

1. தொழில் மற்றும் தொழிலாளர் அல்லது நிறுவனச் சார்பான காலனிகள் நிறுவுவதன் மூலம் பஞ்சாயத்து எல்லைக்குள் கிடக்கும் நாட்டுப் பகுதிகள், உடனடியாக நகர்ப்புறத்தன்மையை அடைந்துள்ளமையால் பஞ்சாயத்துகள் பற்றிய சட்டத்தின் விதிகள் இத்தகையபகுதிகளின் தேவைகளை நிறைவேற்றப் போதாதவையாகக் காணப்படுகின்றன. இத்தகைய பகுதிகளின் நகர சுத்தி, நகரப்பாதுகாப்பு, சுகாதாரம் முதலானவை சம்பந்தமாகக் கூடுதல் வசதிகள் நல்கும் பொருட்டு, இப் பகுதிகளை ஒன்று சேர்த்து நகர்ப்புறமாக அமைத்தலும், அதன் தல ஆட்சிப் பொறுப்பை நகர்ப்புறக்குழுவிடம் ஒப்படைத்தலும் தேவையெனக் கருதப்படுகின்றது. மேலும் நகர்ப்புறங்களின் நிலைமைகளுக்குப் பொருந்துகிறவாறு, தல ஆட்சிகளுக்குப் பொருந்தக்கூடியவாறான நகராட்சிச்சட்டத்தின் அல்லது வேறு சட்டத்தின் விதிகளை இந்நகர்ப்புறங்களுக்கும் வியாபிக்கச் செய்தலும் தேவையெனக் கருதப்படுகின்றது. இந்த நோக்கத்தை எய்தவேண்டுமென்பதே இச்சட்டமூலத்தின் முக்கிய கருத்தாகும்.

2. மாநிலத்திலுள்ள பஞ்சாயத்துகளுக்கென பொது நிருவாகம் ஒன்று அமைப்பதற்கான விதிகளும் உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

<u>ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றுவதற்கான அதிகாரம் பற்றிய நினைவுக்குறிப்பு.</u>

1. சட்டமூலத்தின் 3-ம் உட்பிரிவின் மூலம் இடைப்புகுத்தத் தீர்மானித்துள்ள 31B. பிரிவு, விளம்பரத்தின் மூலம் 1966-ம் ஆண்டின் [illegible] நகராட்சிச், சட்டத்தின் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குகளின் அல்லது [illegible] மாநிலத்தின் வேறு எந்தப் பகுதியிலேனும் நிலவிலிருக்கும் வேறு ஏதேனும் சட்டத்தின் விதிகளை, விளம்பரத்தில் குறிப்பிடக்கூடியவாறான அளவிலும் மற்றும், அவ்வாறான

மாற்றங்கள், கூடுதலாகச் சேர்த்தலை மற்றும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டும், நகர்ப்புறமென அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்கு வியாபிக்கச் செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கின்றது. நகர்ப்புறத்தின் நல் அபிவிருத்தியை நிலைப்படுத்துவதற்குத் தேவையெனத் தோன்றுகின்றவாறு மற்றும் அவ்வாறான சமயத்தில், நகராட்சிச் சட்டத்தின் மற்றும் இதனோடு சம்பந்தப்பட்ட நிலவிலுள்ள சட்ங்களின் விதிகளை நகர்ப்புறத்திற்கு வியாபிக்க செய்வது இதன் உத்தேசமாகும். புதிய பிரிவின் மூலம் வழங்கத்தீர்மானித்துள்ள அதிகாரம் அசாதாரணமானதென்று. மேலும் இப்பிரிவின் கீழ் பிறப்பிக்கப்படும் எல்லா விளம்பரங்களும் சட்டசபை முன் வைக்கப்படவேண்டுமென்பதோடு சட்டசபை வருத்தக்கூடிய ஏதேனும் மாற்றத்திற்குட்பட்டிருக்கவும் வேண்டும்.

2. சட்டமூலத்தின் 3-வது உட்பிரிவு, பொதுப் பஞ்சாயத்து நிருவாகமொன்று அமைக்கவும், பஞ்சாயத்து அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் (வேலைக்கென) சேர்க்கப்படுதல் மற்றும் அவர்களின் பணிநிலைமைகள் ஒழுங்குபடுத்துவதற்குமான ஒழுங்குகள் உருவாக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கின்றது. ஒழுங்குகள் உருவாக்கக்கூடியவாறான காரியங்கள் வாலாயத்தன்மை மற்றும் நிருவாகத்தன்மைத்தாகும். அன்றியும் ஒழுங்குகள், அவை பிறப்பிக்கப்பட்ட பின்னர் சட்டசபையின் பரிசீலனைக்குட்ப்பட்டிருக்கவேண்டும்.

கே. ஏ. தாமோதர மேனன்.

G. 2953